**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் - 2010**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதிஉயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 2.2 ஆம்

பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமத் (இகநி) துடன் இணங்காமை

கீழே காணப்படும் இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| | இலங்கை கணக்கீட்டு நியமத்துடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இ.க.நி 03 | வைத்திய வழங்கல் பிரிவு வெளியிடுவதற்குள்ள கையிருப்பாக ஐந்தொகையில் ரூபா 285,911,177 காட்டப்பட்ட போதும் அதில் ரூபா 157,543,987 க்கான நிராகரிக்கப்பட்ட கையிருப்பும் ரூபா 12,011,582 க்கான விற்பனை செய்ய முடியாத கையிருப்பும் உள்ளடங்கியிருந்தன. இதன் பொருட்டு போதியளவு ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. இதன் |

காரணமாக, ஆண்டிற்கான இலாபம் சரியான பெறுமதியை காட்டவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) | இ.க.நி 05 | கையிருப்பு நட்டமானது முறையான அங்கீகாரத்துடன் கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், ரூபா 23,735,955 பெறுமதியான தரங் குறைந்த மருந்துகள் சொத்தாக இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தன. |
| (இ) | இ.க.நி 16 | கொடுப்பனவு செய்ய வேண்டிய இளைப்பாற்று நலனுக்கான பொறுப்பைக் கணிப்பிடுகையில் நியமத்தின் 57 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. |

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

---------------------------------------

ஐந்து ஆண்டுகளைக் கடந்து விட்ட அரச நிறுவனங்களுக்கான கடன்பட்டோர் மீதியின் பொருட்டு 100 சதவீத ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், வைத்திய வழங்கற் பிரிவைத் தவிர ஏனைய அரச நிறுவனங்களின் 1 ஆண்டுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிக்கும் 100% ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) குறைத்துக் காட்டுதல்**

--------------------------------

(i) ஆய்வுகூட ஆராய்ச்சி வருமானம் ரூபா 806,684 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) வழங்குனர் சங்க வருமானம் ரூபா 157,904 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகரித்துக் காட்டுதல்**

---------------------------------

மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்ய வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரியான ரூபா 220,676 கணக்கிலிடப்படாமையால் ஆண்டிற்கான இலாபம் அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 பெறவேண்டிய கணக்குகள்

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு முடிவிலான வர்த்தகக் கடன்கொடுத்தோர் கணக்கு மீதி ரூபா 360,312,058 ஆகும். இதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 7,345,024 கடன் மீதியும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 9,209,552 கடன் மீதியும் 1 – 2 ஆண்டுகளுக்குட்பட்ட ரூபா 14,124,677 கடன் மீதியுமிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு முடிவில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற வேண்டிய மொத்தக் கடன் மீதி ரூபா 3,069,278,485 ஆகும். இதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 114,944,359 கடன் மீதியும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 621,917,910 கடன் மீதியும் உள்ளடங்கியிருந்தன.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

-----------------------------------------------

விற்பனை செய்ய முடியாத ரூபா 12,011,582 பெறுமதி வாய்ந்த கையிருப்பு சம்பந்தமான விரிவான பட்டோலை இன்மையால் இவ் விடயத்தைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் திர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | 2000 ஜனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீபீ/6 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | மீளாய்வாண்டின் உழைக்கும்போதே செலுத்த வேண்டிய வரியாகிய ரூபா 4,825,555 ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுவதற்குப் பதிலாக கூட்டுத்தாபன நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 15.6 ஆம் பிரிவு | பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கல்களில் உள்ளடங்கிய பயன்பாட்டு வரி குறித்த செலவினத்துடன் சேர்த்துக் கணக்கிடப்பட்டமையால் செலவினம் ரூபா 186,726 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது |
| (iii) | கொள்வனவு வழிகாட்டி - 2006 மார்ச் 1 ஆந் திகதிய என்பீவீ 9 ஆம் இலக்க தேசிய கொள்வனவு நிறுவகத்தின் கொள்வனவு விதிக்கோவை | |
| | பிரிவு 2.8.4 | திணைக்களத்தின் கேள்விச் சபைக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்று நியமிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் தொழில் நுட்பப் பிரிவு மதிப்பீட்டுக் குழுவாகப் பணியாற்றுவதாகத் தலைவர் அறிவித்திருந்தார். |
| | பிரிவு 6.3.6 | கேள்விப் பத்திரங்களைத் திறப்பது சம்பந்தமான நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவங்களில் அறிக்கையிடப்பட வேண்டும். அவ்வறிக்கைக் குறிப்புகளில் அவற்றை திறப்பது தொடர்பான குழுவின் அங்கத்தவர்கள் கையெழுத்திடவில்லை. |
| | பிரிவு 2.9.1 | கொள்வனவுக் குழு அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவின் போது ரூபா 5 மில்லியனுக்கு |

மேற்பட்டதும் ரூபா 25 மில்லியனுக்குக் குறைந்ததுமான கொள்வனவுகளுக்கு வழங்கப்படக் கூடிய தொகை ரூபா 3,000 ரூபா 2,000 என்பனவாகும். எனினும், தலைவருக்கு ரூபா 15,000 முதல் ரூபா 17,500 வரையிலும் குழுவின் அங்கத்தவர்களுக்கு ரூபா 10,000 முதல் ரூபா 12,500 வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பொருட்டு அமைச்சினது செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகத் தலைவர் அறிவித்திருந்தபோதும், கொடுப்பனவிற்கான அங்கீகாரத்திற்குரிய அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படவில்லை.

iv ஒக்டோபர் 10 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 41/90

---------------------------------------------------------------------

| | |
|---|---|
| பந்தி 2.11 | ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படவில்லை. |
| பந்தி 3.12 | வாகனங்களது வெளியக பழுதுபார்த்தல் வேலைகளுக்கு கேள்விகள், கூறு விலைகள் என்பன கோரப்படவில்லை. |
| நி.பி 104 | வாகன விபத்துக்கள் தொடர்பாக முறைப்படி பரிசீலனை மேற்கொண்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கவில்லை. |

v. தாபனவிதிக்கோவை

--------------------------------

அத்தியாயம் II

| | |
|---|---|
| பிரிவு 13.3 | கூட்டுத்தாபனத்தின் 9 உத்தியோகத்தர்கள் ஒரு ஆண்டுக்கு மேலாக பதில் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------------------

### 2.1 நிதிசார் மீளாய்வு

-------------------------

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

-----------------------------

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 483,774,625 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 401,187,457 ஆகும். நிகர இலாபம் ரூபா 82,587,168 ஆல் அதிகரித்திருந்தது. அதற்கான காரணம் மொத்த இலாபத்தில் ஏற்பட்ட ரூபா 167,813,669 அதிகரிப்பாகும்.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளிலும் மருந்தாக்கல் (ஒசுசல) ஈட்டிய இலாபமும் நட்டமும் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | 2010 ஆம் ஆண்டு | 2009 ஆம் ஆண்டு | 2008 ஆம் ஆண்டு | 2007 ஆம் ஆண்டு | 2006 ஆம் ஆண்டு |
|---|---|---|---|---|---|
| செயற்பாட்டிலுள்ள மருந்தகங்களின் எண்ணிக்கை | 25 | 23 | 21 | 20 | 20 |
| ஈட்டிய மொத்த இலாபம் (ரூபா.மில்) | 96.624 | 97.378 | 44.214 | 54.805 | 62.154 |
| நட்டத்தில் இயங்கிய மருந்தகங்களின் எண்ணிக்கை | 06 | 04 | 10 | 08 | 06 |
| அடைந்த மொத்த நட்டம் (ரூபா.மில்) | 7.016 | 3.800 | 9.160 | 12.461 | 5.977 |

(இ) மருந்தக (ஒசுசல) செயற்பாடு தொடர்பான பரிசீலனையின்போது, 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டில் சாதகமற்ற நிலைமை தென்படுகின்றது. நட்டத்தில் இயங்கும் மருந்தகங்கள் (ஒசுசல) 4 முதல் 6 வரை அதிகரித்திருந்தன. கூடிய நட்டமடைந்த மருந்தகம் (ஒசுசல) பதுளை ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை 8.8% ஆல் அதிகரித்தபோதும் இலாபம் 4.98% ஆல் குறைவடைந்தமை தென்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின்போது நீர்கொழும்பு மருந்தகத்தில் (ஒசுசல) ஏற்பட்ட பணமோசடி ரூபா 3,863,610 ஆகும்.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது ரூபா 924,000 பெறுமதியான Chlorpromazine Tablets குளிகை இருப்பு கொள்வனவு செய்யப்படுகையில் மேற்கொள்ள வேண்டிய மாதிரிப் பரீட்சை ஏறக்குறைய 2 மாதகால தாமதத்திற்குள்ளாகியது. அத்தோடு அதன் தரம் பயனளிப்பதாயில்லை. எனினும், ஏற்கனவே ரூபா 757,680 பெறுமதி வாய்ந்த 1435 அலகு மருந்து நோயாளருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 மே 20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அவசர அத்தியாவசிய உயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 450 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இதன்போது 16 அத்தியாவசிய பொருள்கள் பட்டோலைப்படுத்தப்படவில்லை. அத்தியாவசியமானவையாகக் குறிப்பிடப்படாத ரூபா 30,871,760 பெறுமதியான 6 மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 18 வகை மருந்துகளை வழங்குவதில் நீண்ட நாட்கள் கழிந்திருந்தன. மேலும், கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதி ரூபா 262 மில்லியன் ஆகும். சாதாரண நிலைமையில் அவற்றைக் கொள்வனவு செய்திருப்பின் செலவாகும் தொகை ரூபா 86 மில்லியனே. கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்துடன் சம்பந்தப்படாத ஒன்றாக இதனைத் தலைவர் அறிவித்திருந்தார்.

(இ) இருபத்தாறு மருந்தகங்களில் (ஒசுசல) காலங்கடந்துவிட்டமையாலும் தரம் குறைந்த மற்றும் பழுதடைந்தமையாலும் ரூபா 1,313,299 பெறுமதியான மருந்துகள் இருந்தன. அதில் ரூபா 282,697 க்கான உள்ளூர் கொள்வனவுகளும் அடங்கியிருந்தன.

(ஈ) மருந்துகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக வெளி நிறுவனம் ஒன்றிற்குக் களஞ்சிய வாடகையாக ரூபா 1,344,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிராகரிக்கப்பட்ட ரூபா 243,603,699 பெறுமதியான மருந்துத் தொகையும் அக்களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்குவதற்காகவும் கூட்டுத்தாபனத்தின் விற்பனைகளுக்காகவும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் என்பன குறித்த தினத்தில் துறைமுகத்திலிருந்து அகற்றப்படாமையால் துறைமுகத் தாமதக்கட்டணமாக 2007,2008,2009,2010 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 17,447,647 ரூபா 15,753,859 ரூபா 29,983,137 ரூபா 32,471,530 எனக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.2.2 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்த காலத்திற்குத் தேவையான கையிருப்பை வழங்காது விட்டமையால் வைத்திய வழங்கற் பிரிவு நிராகரித்த Cotton wool rolls கையிருப்பினது பெறுமதி ரூபா 3,336,074 ஆகும்.

(ஆ) பெறப்பட்ட Ferrous Sulphate 18,000 அலகுகள் ஆகும். இதில் 13,347 அலகுகள் தரங் குறைந்தனவாகும். அவற்றின் பெறுமதி ரூபா 5,073,600 ஆகும். இப் பெறுமதியில் ரூபா 4,095,697 வழங்குநரிடமிருந்து அறவிடப்படாதிருந்தது.

(இ) CEPHALEXIM CAPSULES – BP 500 mg கொள்வனவு

-----------------------------------------------------------------------------------------

KS 861 தொகுதியைச் சேர்ந்த மருந்திற்குரிய தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழின் அடிப்படையில் KS 926 எனும் தொகதியைச் சேர்ந்த தரங் குறைந்த 2000 அலகு மருந்துகள் ரூபா 1,126,055 க்குக் கவனமின்மை காரணமாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 99.75% நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுமிருந்தது.

(ஈ) PROMETHAZINE ORAL 500mg

---------------------------------------------------------

ஆய்வுகூட பரிசோதனையின்போது ரூபா 864,866 பெறுமதியான 17,947 சிறு போத்தல்களில் அடைக்கப்பட்ட Promethazine Oral 500 mg மருந்து தரங் குறைந்தனவாக உறுதி செய்யப்பட்டிருந்தன. எனினும், அம்மருந்துகளுக்கான

பெறுமதியை வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதில் 4,886 குப்பிகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின்போது தரங் குறைந்த, காலங்கடந்த, பாதிப்படைந்த ரூபா 20,781,594 மருந்துகள் அழிக்கப்ட்டிருந்தன.

### 2.2.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------

(அ) மருந்துக்குரிய பெயருடன் அதனைக் கொள்வனவு செய்கையில் அதிகுறைந்த விலையைக் கருத்திற்கொள்ளாது விசேட வைத்தியர்களது சிபார்சுக்கமைய வர்த்தகக் குறியீட்டிலான மருந்தைக் கூடிய விலையில் கொள்வனவு செய்து அதன் காரணமாக கூட்டுத்தாபனம் கூடுதலாகச் செலவிட வேண்டியேற்ப்பட்ட தொகை ரூபா 16,053,568 ஆகும்.

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 102,181,043 பெறுமதியான 2,900,000 அலகுகள் கொண்ட Cefuroxim Sodium Injection கண்ணாடித் துண்டுகளைக் கொண்டிருந்தமை பரிசோதனைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டபோது அவற்றில் 2,852,409 அலகுகள் ஏற்கனவே நோயாளருக்கு வழங்கப்பட்டிருந்தன. வழங்குநரிடமிருந்து எஞ்சிய 47,591 அலகுகளுக்கான பெறுமதியாகிய ரூபா 1,822,163 அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) வைத்திய வழங்கல் பிரிவு 36,000 Promethazine Oral 500 mg Pack க்காக விண்ணப்பித்திருந்தது. எனினும், அதனைப் புறக்கணித்து பிரதிப் பொது முகாமையாளரின் (விற்பனை) சிபார்சிற்கமைய 70,000 சிறு போத்தல்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானஞ் செய்ததோடு அக்கட்டளையில் 29,691 கூறுகள் பெறப்பட்டுமிருந்தன. அதில் ரூபா 864,866 பெறுமதியான 17,947 அலகுகள் தரங் குறைந்தன என உறுதிசெய்யப்பட்டது.

(ஈ) சிறுபோத்தல்களில் அடைத்த 1,250,000 Cefotaxime Bp/Usp 1 g மருந்தில் ரூபா 6,529,137 பெறுமதியான 296,200 சிறு போத்தல்கள் தரங் குறைந்தமையால் அவற்றை விற்பனைச் சந்தையிலிருந்து அகற்றுமாறு வர்த்தக வழங்கற் பிரிவு அறிவித்திருந்தது.

**2.2.4 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

---

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் நிலவியமையால் வரவு, செலவுத்திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் மீது விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மருந்துக் கொள்வனவும் வழங்கலும்
(ஆ) நிர்மாண வேலை
(இ) ஆளணி முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(உ) கையிருப்புக் கட்டுப்பாடு